
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 3 | மே 1990 | இதழ் 5

பரிசுத்த



வேதாகமம்

வெளியிடுவோர் :-

ஈரோடு கிறிஸ்துவின் சபையார்

2, மணல் மேடு வீதி, ஈரோடு-638 002.

# LET BROTHERLY LOVE CONTINUE

We look forward to having the pleasure of your fellowship for

FIRST ALL TAMILNADU CHURCHES OF CHIRIST YOUTH MEETING – 1990

An Exciting Experience to share with

Please confirm your arrival

WELCOME : ALL FAMILIES, LEADERS & TEACHERS

AT : THE CHURCH BUILDING, 13, SAI NAGAR IInd STREET,
VILLIVAKKAM EAST GATE, MADRAS - 600 082.

DATE & TIME : MAY 24th 9.30 A.M. TO MAY 25th 5.00 P.M

Sermon on POWER OF POSITIVE THINKING

Many other Programs like

Dumbcharade, Figure it out, Bible skit, Quiz, Movies. about Science and New Testament Christianity

CHURCH OF CHRIST, NEAR VILLIVAKKAM RAILWAY STATION,
MADRAS - 600 082.

BUS ROUTES : 42A, 26D etc.

## இதழின் உள்ளே

1. நான் என்ன செய்ய வேண்டும் ?
2. இதில் எல்லாம் என்ன இருக்கிறது ?
3. ஜெபம் செய்யக் கற்றுக் கொள்வோம் !
4. ஒரு கிறிஸ்தவன் சோதனைகளை எவ்வாறு மேற்கொள்ளலாம் ?
5. ஒரு கிறிஸ்தவனுக்குக் கிடைக்கும் ஆசீர்வாதங்கள்.
6. தெரிந்து கொள்ளுங்கள்.

THIRUMARAI AASAAN

Editor :
E. Z. SELVANAYAGAM

Honorary Editor
J. C. CHOATE

Published by Church of Christ

2, Manalmedu Street, ERODE-638 002. Tamil Nadu. India

Pleading for the restoration of pure New Testament Christianity:

Vol 3. May—1990 Issue 5

ஆசிரியவுரை

# நான் என்ன செய்ய வேண்டும்?

*கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நியாய விசாரணை செய்த ஆளுநர் பொந்திய பிலாத்து,.... "யூதருடைய இராஜாவென்று நீங்கள் சொல்லுகிறவனை நான் என்ன செய்ய வேண்டும்"? என்று கேட்டான் (மாற்கு 15:2)*

ரோமப் பிரபுக்கள் குலத்தில் தோன்றிய பொந்திய பிலாத்து-வை திபேரியு என்ற ரோமச் சக்கரவர்த்தி, அன்றைக்கு ரோமப் பேரரசின் ஆட்சியின் கீழ் இருந்த பலஸ்தீனா நாட்டின் யூதேயா மாநிலத்துக்கு ஐந்தாவது ஆளுநராக நியமித்திருந்தான். கி.பி. 26ல் இவன் ஆளுநராக நியமிக்கப்படுமுன்னர், இவனைப் பற்றி நமக்கு அதிகமாய்த் தெரிந்து கொள்ள முடியவில்லை.

யூதேயா மாநிலத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பொழுது, ரோமைப் பட்டாளம் உட்பட மாநிலத்தின் முழு அதிகாரப் பொறுப்பும் இவனுக்குக் கொடுக்கப்பட்டது. ஒருவனை மரண ஆக்கினைக்கு உட்படுத்தவும், விடுவிக்கவும் கூட அதிகாரம் உண்டு (யோவான் 19:10) அந்நாளில், யூதர்களுடைய உயர் மட்ட சமய சங்கமாகிய ஜனகரீம் சங்கத்தின் தீர்மானங்கள் கூட இவனுடைய அங்கீகாரம் இல்லாமல் அமுலுக்கு வரமுடியாது. யூத சமயத்தின் உயர்பதவியாகிய பிரதான ஆசாரியனை (தலைமைக் குரு) நிய-மிக்கவும், தேவாலய வரவு செலவுக் கணக்குகளைக் கண்காணிக்-கவும் அதிகாரம் உண்டு. பிரதான ஆசாரியனுடைய விழாக்கால உடுப்புகள் கூட இவனுடைய பாதுகாப்பில் தான் வைக்கப்பட்டி-

ருக்கும். பண்டிகை நாட்களிலும், சிறப்பு நிகழ்ச்சிகளின் போதும் அவைகளை எடுத்து உபயோகித்து விட்டு, மீண்டும் இவனுடைய பொறுப்பில் வைத்துப் பாதுகாக்கப்படும்.

இவனுடைய ஆட்சியின் போது மக்களுக்கு நன்மை பயக்கும் திட்டங்கள் எதுவும் செயல்படுத்தப் பட்டதாகத் தெரியவில்லை. இவன் ஒரு அகங்காரியாகவும், பிடிவாத குணமுள்ளவனாகவும், கோபக்காரனாகவும் இருந்திருப்பான் என்று தெரிகிறது. தேவையில்லாமல் இரத்தம் சிந்தும் கொடியவன் என்றும் தெரிகிறது. லூக்கா 13-ம் அதிகாரம் முதல் இரண்டு வசனங்களில் சொல்லப்பட்டுள்ள சம்பவம் இவனுடைய அராஜகத்திற்கு ஓர் எடுத்துக் காட்டு. இந்நிகழ்ச்சியினால் யூதர்கள் வெகுண்டெழுந்தனர். அந்நாட்களில் கலிலேயாவை ஆண்டு வந்த ஏரோது மன்னனுக்கும் இவனுக்கும் பகை உண்டானதற்கு இதுவே காரணமாக இருக்கலாம் என்று சொல்லுவாரும் உண்டு. (லூக் 23:12)

புதிய ஏற்பாடு இவனை ஒரு பலவீனமான பாண்டம், கொள்கைப் பிடிப்பும், நீதியின் மேல் பசி தாகம் அற்ற ஒரு பச்சோந்தி என்றும், மக்களை மதியாதவன் என்றும் வர்ணிக்கிறது. இயேசுவை சிலுவையில் அறைய ஒப்புக் கொடுத்தது கூட யூதர்களைத் திருப்திப் படுத்த வேண்டும் என்ற நோக்கத்தைக் காட்டிலும், ரோமச் சக்கரவர்த்தியை திருப்திப்படுத்தவும், தன் பதவியைக் காப்பாற்றிக் கொள்வதற்காகத்தான் என்று கருதுவாரும் உண்டு. இவனுடைய இறுதி நாட்கள் சமாதானம் இல்லாமலும் பரிதபிக்கப் படத்தக்கதாகவும் இருந்ததாகவும், தற்கொலை செய்து கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டான் என்றும் சொல்லப்படுகிறது.

இப்படிப் பட்ட கொடியவனிடத்தில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நியாய விசாரணைக்கு நிற்க வேண்டிய துர்ப்பாக்கியமான நிலை காலத்தின் கட்டாயமே. அவனுடைய நீதிக்குப் புறம்பான—சட்டத்தையும், நியாயத்தையும் மதியாமல் செய்த நியாய விசாரணையை மறு சீராய்வு செய்து, அவனுடைய பலவீனங்களையும் குறைகளையும் கண்டறிந்து நம்முடைய வாழ்க்கையில் அவ்விதமான தவறுகளைக் களைய முயல்வோம்.

பிலாத்துவினிடத்தில் நல்ல குணங்கள் என்று ஒன்றுமே இல்லையென்று தீர்மானமாகக் கூறிட முடியாது. இயேசு நிரபராதி என்றும் (லூக் 4:14,15) அவரைப் பிரதான ஆசாரியர்களும் ஜனத்தின் மூப்பரும் பொறாமையினால் ஒப்புக் கொடுத்தார்கள் என்றும் (மத் 27:17; மாற்கு 15:9) அறிந்தும் இருந்தபடியால்

அவரை எப்படியாவது விடுதலை செய்ய வேண்டும் என்று முயற்சித்தான். பண்டிகை நாட்களில் நான் உங்களுக்கு ஒருவனை விடுதலை செய்ய வேண்டும் அல்லவா? அதைப் பயன்படுத்தி, இயேசுவைக் கண்டித்து விடுதலை செய்கிறேன் என்று (லூக் 23;16) அவரை வாரினால் அடித்து இம்சித்தால் ஒரு வேளை அவர்கள் மனமிரங்கி, விடுதலை செய்விக்க இணங்கு வார்கள் என்று எண்ணி, வாரினால் அடிக்க உத்தரவிட்டான். அவைகள் ஒன்றும் பயன்தரவில்லை என்ற நிலையில் தான் மரணத்துக்கு ஒப்புக் கொடுத்தான். பாவம்', நிர்ப்பந்தம்! அவன் என்ன செய்வான்? என்று சிலர் பரிதாப்படுவர். ஆனால் நாம் ஒன்றை மறந்து விடக்கூடாது. அவன் என்னையும் உங்களையும் போல பொதுமக்களில் ஒருவன் அல்ல. அவன் கையில் அதிகாரம் இருந்தது. ஒருவனுக்கு நன்மை செய்யத் திராணி இருக்கும்போது, அதைப் பயன்படுத்தாமல் கோழைத்தனமாக எடுப்பார் கைப்பிள்ளையாக இருப்பது எப்படி நியாயம் ஆகும் ? ஊரார் விரும்பவில்லை. அல்லது எதிர்க்கிறார்கள் என்பதால் நீதியின் செங்கோலை வளைப்பது நெறியாகாது. அது சமுதாயத்தைச் சீர் குலைத்துப்போடும். உலகம் பொல்லாங்கனுக்குள் சிக்கிக் கொண்டு தடுமாறிக் கொண்டிருக்கிறது. கொள்கைப் பிடிப்போடும், தர்ம நியாயங்களில் நம்பிக்கை வைத்து, அநியாயத்தை, எதிர்த்து நீதியை நிலை நாட்ட எதிர் நீச்சல் போடும் தைரியமும் மன உறுதியும் தேவை. உயர்ந்த இடத்தில் அமர்ந்திருக்கும் அநேகரிடத்தில் அது இல்லாததால் தான் சமூகம் சீர்குலைந்து கீழ்நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது: நிரபராதிகள் தண்டிக்கப்படுகிறார்கள். சிறைக்குள் இருக்க வேண்டிய பலர் வெளியே பெரிய மனிதர்கள் வேடத்தில் உலா வந்து கொண்டிருக்கிறார்கள், இந்நிலை மாறவேண்டும்.

பிலாத்துவுக்கு இயேசுவைச் சிலுவையில் அறைய வேண்டும் என்ற எண்ணம் இல்லை என்பது மெய்தான். ஆனாலும் நிர்ப்பந்தத்துக்கு அடிபணிந்து நிரபராதியைக் கொலைக்கு ஒப்புக்கொடுத்து விட்டானே! சில சமயங்களில் நம்முடைய தோல்விக்குக் காரணம். நாம் முயற்சியே செய்யவில்லை என்பதல்ல. போதுமான அளவு முயற்சி எடுத்து தீவிரமாகப் போராடததுதான் காரணம். நிர்ப்பந்தம் தாங்க முடியாமல் கடமை தவறி விட்டானேயன்றி மற்றபடி அவன் நல்லவன் தான் என்று யாரும் அவனுக்காக அனுதாபப் பட முடியாது. அதே போல நம்முடைய வாழ்க்கையிலும் சூழ்நிலைகள், சந்தர்ப்பங்கள் நம்மை நெருக்கிக் கொண்டிருக்கிறபடியால் நான் இன்னும் பாவத்தில் உழன்று கொண்டிருக்கிறேன் என்று கூறி, நாம் தப்பித்துக் கொள்ளமுடியாது

அவனுடைய உள்ளத்தில் நியாய உணர்வுகள் படியாமற்போனதுக்கும், சிறந்த பண்புகள் உருவாமற் போனதுக்கும் அவனு

டைய வளர்ப்பு முறையே காரணம் என்று கூடச் சொல்லலாம். சாலமோனின் நீதி மொழிகள் கூறுவதைக் கவனித்தால் இது உண்மை என்று விளங்கும். ''பிள்ளையாண்டான் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து. அவன் முதிர் வயதிலும் அதை விடா திருப்பான்.'' (நீதி 22;6) என்று கூறுகிறது. ஆம் நண்பர்களே! யோசேப்பும், மோசேயும் யோசுவாவும், தானியேலும் சான்றோர் களாகவும், கொள்கைப் பிடிப்புள்ளவர்களாகவும், தீமைக்கும், பாவத்துக்கும் விலகி நின்று உயர்ந்ததற்கு, அவர்களுக்கு இளம் பிராயத்தில் போதிக்கப்பட்ட நீதி போதனைகளும், நற்பண்பு களுமே காரணம். ஒழுக்கம் என்பது ஒரு நாளில் கற்றுக்கொள்ளக் கூடியது அல்ல. சிறிது சிறிதாக, கொஞ்சம் கொஞ்சமாக பிஞ்சு உள்ளங்களில் செலுத்தப்பட வேண்டும். நாம் நம்முடைய குழந்தைகளுக்குக் கிறிஸ்தவ அறநெறிகளைச் சிறு பிராயத்திலிருந்தே போதிக்கிறோமா ? அப்படிச் செய்யாமற் போனால் நாம் அநேக பிலாத்துகளைப் பெற்று நாட்டு நலனைக் கெடுக்கிறோம் என்று பொருள்.

மேலும், அவன் நீதியையும், நியாயத்தையும் கடைப்பிடிப்பதினால் கிடைக்கும் தேவ ஆசீர்வாதத்தை விட மனுஷரால் புகழப்படுவதற்கும் சமுதாய அந்தஸ்துக்கும் அதிக மதிப்புக் கொடுத்தான். (யோவான் 12:43) நியாயத்தைச் செய்வதை விட ஒரு சில மக்களால் நல்லவன் என்று பாராட்டப்படுவதை விரும்புகிற மக்கள் நம்மிடையேயும் கணிசமான பேர் வழிகள் உண்டு. உலகத்தை நேசித்து, ஆத்துமாவை அலட்சியப்படுத்துவதற்கு நாம் தயங்குவதில்லை. அரிசியைக் குப்பையில் கொட்டி விட்டு உமியைப்! பத்திரப்படுத்தி வைக்கிற இச்செயலை நாம் என்று கைவிடுமோ! ''மனுஷன் உலக முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு இலாபம் என்ன ?,' (மத் 16;26) என்று இயேசு பெருமான் கேள்வியை அறிந்த பிறகும் நம்மை மாற்றிக் கொள்ள விருப்பமில்லாமல் காலம் கடத்துகிறோம். எந்தப் பொருளுக்கும் ஒரு விலையுண்டு. அப்படியிருக்க, நீங்கள் விலை ஒன்றும் கொடுக்காமல் நல்லவன், நீதிமான் என்ற பெயரை எப்படிச் சம்பாதிக்க முடியும் ? பிரச்சனை, எதிர்ப்பு இல்லாமல் இருந்தால் நான் கிறிஸ்தவன். உபத்திரவம் சிக்கல் என்று வந்தால் நான் வளைந்து கொடுப்பது தான் விவேகம். நான் பேதுருவைப் போல ஒரேயடியாய் மறுதலிக்க வில்லையே ஆலயத்துக்குச் செல்கிறேன். வேதம் வாசிக்கிறேன், பல ஊழியர் களுக்குக் காணிக்கை அனுப்புகிறேன். படிக்கிறனோ இல்லையோ, இரண்டு மூன்று பத்திரிக்கைகளுக்குச் சந்தா அனுப்புகிறேன். ஆனால் ஒன்று : சில விக்கிரகங்களைப் பூஜை அறையில் வைத்-

திருக்கிறேன். ஆனால் வணங்குவதில்லை. சும்மா, பூஜை போடுகிற மாதிரி நடிப்பேன். என்ன செய்யட்டும்! என் சூழ்நிலை அப்படி. இல்லையென்றால் பிழைப்பு நடக்காது. என்று சமாதான விளக்கம் கொடுப்பார்கள். அப்படிப் பட்டவர்கள் தானியேல் புத்தகத்தை ஜெபத்துடன் வாசித்து தியானிக்க ஆலோசனை கூறுகிறேன்-

மற்றவர்கள் ஒத்துழைத்தால், இசைந்து வந்தால் என்னால் நன்மை செய்ய முடியும் என்பது போல் பிலாத்து நடந்து கொண்டான். யூதர்கள் ஒத்துக் கொடுத்திருந்தால் இயேசுவை விடுதலை செய்திருப்பேன் — நியாயம் என்பது ஒரு நித்திய நெறி, அதற்கு மெஜாரிடி தேவையில்லை. ஆகையால், மற்றவர்கள் இசைந்து வராதினால் தான் ஒன்றும் செய்ய முடியவில்லை என்று புலம்பாதே, தீமை செய்யத் திரளான ஜனங்களைப் பின்பற்றாதே என்ற தேவ எச்சரிப்பைக் கவனி. (யாத் 23:2) ''நானும் என் வீட்டாருமோ வென்றால் கர்த்தரையே சேவிப்போம்'' என்று கூறிய யோசுவாவின் சீரிய முன் மாதிரி எப்பொழுதும் உங்கள் கண்முன் நிற்கட்டும்; உங்கள் காதுகளில் ஒலிக்கட்டும். (யோசு 24:15)

பிலாத்து தான் செய்ய வேண்டிய கடமையைத் துணிந்து செயலாற்றாமல் வேறு எவரையாவது பொறுப்பாக்கி விட்டு தான் தப்பித்துக் கொள்ளலாம் என்று எண்ணினான். அதனால் இயேசுவை சம்பந்தமில்லாத ஏரோதிடமும், பொறாமை நிறைந்த யூதச் சமயத் தலைவர்களிடமும், அவர்களால் ஏவி விடப்பட்ட மக்கள் திரளிடமும் பிரச்சனையைக் கொண்டு சென்றான். அதன் மூலம் அவனுடைய மனக்குழப்பத்தை வெளிக் காட்ட முடிந்ததேயன்றி பெரிய நன்மை ஒன்றும் ஏற்பட்டு விடவில்லை. கையைக் கழுவிக் கொண்டான், உண்மை. ஆனால் அவன் மனதில் படிந்து கிடந்த நியாயக் கேட்டைத் துடைத்துப் போட முடியவில்லையே.

பிலாத்து, இயேசு நிரபராதி என்று தெரிந்து கொண்டு, கசையடிகொடுத்துத் துன்புறுத்துவதின் மூலம் மக்களின் இரக்கத்தைப் பெற்று சமரசம் செய்ய முற்பட்டான். நீதியும், சத்தியமும் சேதமடையாமல் சமரசப்படுத்த முடியாதவைகள். அப்படிச் செய்ததால் நீதி வளைந்து போனது; சத்தியம் புரண்டு போனது. விளைவு? நிரபராதி மரத்தில் தொங்கினார். நாம் கூட சத்தியத்தையும், உலகியல் கோட்பாட்டையும் சமரசப்படுத்த முயலுகிறோம். விளைவு? மனிதரிடம் மதிப்பு; கர்த்தரிடம் கசப்பு.

பிலாத்து உலக ஸ்நேகத்தை நீதிக்கு மேலாகக் கருதினான். ''இயேசுவை விடுதலை செய்தால் நீ சீசருக்கு நண்பன் அல்ல என்று

மிரட்டியவுடன் பணிந்தான். எது பெரிது? தேவ நீதியை நிறைவேற்றுவதா? சீசரின் (சக்கரவர்த்தியின்) சபாஷா?'' ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம். ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள். (மத் 10:28) என்கிற சத்தியங்களையும் பிலாத்து கற்பிக்கப்பட்டிருந்தானானால் அவன் தீர்ப்பு வித்தியாசமாக இருந்திருக்கும்; உலக வரலாறும் திசை மாறியிருக்கும்.

நியாயத்தைச் செய்வதற்குப் பிலாத்துக்குக் கொடுக்கப்பட்ட வாய்ப்புகளைப் பயன்படுத்தத் தவறி விட்டான்.

அவன் மனைவி உதவிக்கு வந்தாள் (மத் 27:19.) இயேசுவே கூட ஒத்துழைத்தார். ஏரோதிடம் பேசாது மௌனம் சாதித்தவர், பிலாத்துவோடு பேசினார். ரோம சாம்ராஜ்யத்துக்கு எதிராக ஒரு யூத இராஜ்ஜியத்தை ஸ்தாபிக்க முனைகிறாரோ என்ற பயத்தைப் போக்க ''என்னுடைய இராஜ்ஜியம் இந்த உலகத்துக்குரியதல்ல என்றார்'' (லூக் 23:3,9; யோவான் 18:36).

வாழ்க்கையில் முக்கியமான தீர்மானம் எடுப்பதற்கு மற்றவர்களுடைய ஆலோசனையைக் கேட்டுக் கொண்டிருந்தான். ''நான் இயேசு கிறிஸ்துவை என்ன செய்ய வேண்டும்? இந்தக் கேள்விக்கு நாம் ஒவ்வொருவரும் தனித்தனியாக பதில் அளிக்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். நான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ள விரும்புகிறேன். எதற்கும் என் பெற்றோரைக் கலந்து கொண்டு முடிவு சொல்லுகிறேன். என் சகோதரனுடைய அபிப்பிராயம் வேறு விதமாக இருக்கிறது. என்று தயங்குபவர்களை நாம் பார்க்கிறோம். ஆனால் இரட்சிப்பு சம்பந்தப்பட்ட விஷயத்தில் தேவன் ஒவ்வொருவரையும் தனித் தனியாகக் கணக்குக் கேட்பார் (ரோமர் 14:12; 2 கொரி 5:10) ஆகவே, நீ தீர்மானி, நீ பதில் அளி! மற்றவர்களைச் சார்ந்து நிற்காதே. நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டவர்களுக்குப் பேதுரு அளித்த பதில்: நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும். பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் என்று பதில் அளித்தான். (அப் 2:37,38) இன்றைக்கும் என்றைக்கும் அதுவே பதில். நீங்கள் அப்படிச் செய்யாமல் இருந்தால் இன்றே சிந்தி, செயல்படு.

E. Z. செல்வநாயகம்

# இதில் எல்லாம் என்ன இருக்கிறது ?

நம்முடைய வாழ்க்கையில் நாம் என்ன நினைக்கிறோம்? என்ன சொல்லுகிறோம்? எங்கே வாழ்கிறோம்? எங்கே போகிறோம்? நாம் மற்றவர்களை எப்படி நடத்துகிறோம்? என்ற காரியங்களில் நாம் மிகவும் கவனம் செலுத்துகிறோம். நாம் நடத்தும் வியாபாரம், தொழில் எல்லாவற்றையும் குறித்து நன்கு அறிந்து வைத்திருக்கிறோம். அரசியலை அலசுகிறோம்.

ஆனால் ஆன்மீக விஷயங்களுக்கு வரும்போது அதற்கு முற்றிலும் எதிர்மறையாக நடந்து கொள்கிறோம். அதை அந்த அளவு குடைந்து பார்த்துக் கொண்டிருப்பதற்கு அதில் என்ன இருக்கிறது? நாம் என்ன போதகர் வேலைக்கா போகிறோம்? என்ற நினைப்பில் அசட்டை செய்து விடுகிறோம். ஞாயிற்றுக் கிழமையா? கோவில் பக்கம் தலையைக் காட்டி விட்டு வந்து விட்டால் போதும். விசேஷ நாட்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் ஏதாவது ஒரு நேரம் போய், வந்திருக்கிற சிறப்புச் செய்தியாளரிடம் நமக்காக ஜெபம் செய்யச் சொல்லி ஒரு காணிக்கை கொடுத்து விட்டால் வேலை முடிந்தது என்ற எண்ணத்தில் தான் அநேகம் பேர் இருக்கிறோம். ஆனால் ஆன்மாவா? சரீரமா! எது முக்கியம் என்று கேட்டால், உடனே சந்தேகம் என்ன, ஆன்மா தான் முக்கியம் என்று பதில் வரும். சரீரத்தை விட ஆன்மா முக்கியம் என்று நாம் ஒத்துக்கொள்கிறகாரியத்துக்கு நாம் எந்த அளவுநியாயம் செய்கிறோம்?

சரீரத்துக்கு அடுத்த காரியங்களுக்கு ஆறு நாட்களையும் ஆன்மாவுக்கடுத்த காரியங்களுக்கு ஒரு நாளையும் தேவனே தாராள மனதுடன் நியுமித்து இருக்கிறார். அந்த ஒரு நாளையும் நாம் அவரிடமிருந்து பிடுங்கி, சரீரத்தைப் பேணுவதற்கும், உலக உல்லாசத்துக்கும் செலவிட முனைவது அடுக்குமா? சிந்தித்துப்பாருங்கள்.

மேலும் ஆன்மீக விஷயங்களில் ஒரு காரியம் முக்கியமா? இல்லையா? என்பதை முடிவு செய்வது உயர்மட்டக் குழுக்கள் அல்ல - மெஜாரிட்டி அல்ல அல்லது உயர் பதவியில் இருக்கிறவரின் குறிப்பாணை அல்ல. கர்த்தராகிய இயேசுவே "வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது" என்கிறார் (மத் 28:18) அதன் கருத்து என்ன? ஆன்மீகக் காரியங்களில் அனைத்து அதிகாரங்களும் அவருக்கே கொடுக்கப்பட்டிருக்கிற படியால், மனிதர்களாகிய நமக்கு அதில் மாற்றம் செய்யவோ, கூட்டவோ, குறைக்கவோ, அதிகாரம் கிடையாது.

வெறுமனே அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து அவருடைய சித்தத்தை நிறைவேற்றுவது தான் நம்முடைய கடமை. ஏனெனில் அவரது வார்த்தையே பிரமாணம். அதற்கு அப்பீல் கிடையாது.

இன்னும் சிலபேர் ; ஒருவன் உண்மையும் உத்தமுமாய் இருக்கிறவரையில் அவன் எதை விசுவாசிக்கிறான் என்று விசாரணை செய்து கொண்டிருப்பது தேவையில்லாத விஷயம் என்று கூறுவர். சென்னை செல்லுகின்ற இரயில் ஒன்று ஈரோடு பிளாட்பாரத்தில் வந்து நிற்கிறது என்று வைத்துக் கொள்வோம். எதையும் விசாரிக்காமல் ஏறி உட்கார்ந்து கொள்வது விவேகமாகாது. ஏனெனில் சில பெட்டிகள் திருச்சி செல்லலாம் வேறு சில பெங்களூர் செல்லலாம்; அவைகள் ஜோலார்பேட்டையில் அவிழ்த்து விடப்படும், இன்னும் சில பெட்டிகள் பம்பாய் செல்பவைகளாக இருக்கலாம். அவைகள் அரக்கோணத்தில் நிறுத்தி வைக்கப்படலாம். வேறு எத்தனையோ காரியங்கள், அதே போல மார்க்க விஷயத்தில், போதிக்கப்படுகிற அனைத்தையும் ஏற்றுக்கொள்வது விவேகமாகாது. ''எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள்'' என்று வேதம் எச்சரிக்கிறது. ஏனெனில் கள்ளக் கிறிஸ்துக்களும், கள்ளத் தீர்க்கதரிசிகளும், எழும்பிக் கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத் தக்கதாக பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள். (மத் 24:24) என்று போதிப்பவர்களின் ஆதாரங்களையும் போதனையின் நச்சுத் தன்மைகளையும் குறித்து விழிப்புடன் இருக்கச் சொல்லுகிறார். மேலும் ''சத்தியத்தை அறியுங்கள்; சத்தியம் உங்களை விடுதலையாக்கும் யோவான் 8 : 32) சத்தியம் விடுதலையாக்கும் என்றால், அசத்தியம் நம்மை அடிமைப்படுத்தும் என்றாகிறதல்லவா? சத்தியம் கையில் இருக்கும்போது தவற்றை ஏன் ஏற்றுக் கொள்ள வேண்டும்? உண்மைக்கும் தவறுக்கும், சுதந்திரத்துக்கும் அடிமைத் தனத்துக்கும், இரட்சிப்புக்கும், அழிவுக்கும், எவ்வளவு வித்தியாசம் உண்டோ அவ்வளவுவித்தியாசம் பொய்யை விசுவாசிப்பதினாலும் உண்டாகும்.

இன்னும் சிலர் ஒருவன் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டாலும், பெற்றுக் கொள்ளாவிட்டாலும் அதில் ஒன்றுமில்லை. ஒருவன் முழுகி ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டானா அல்லது தலைமேல் சிறிது தண்ணீரைத் தெளித்து விட்டார்களா? இதெல்லாம் என்னையா ஆராய்ச்சி?! என்றெல்லாம் எரிச்சல் அடைவர். தேவனைப் பற்றியும் அவருடைய ஆசீர்வாதத்தைப் பற்றியும் அக்கரையில்லாத ஒருவருக்கு வேண்டுமானால் இவைகள் எல்லாம் தேவையற்ற ஆராய்ச்சியாக இருக்கலாம். கள்ளப் போதகர்களில் சிலர் கூட இதெல்லாம் முக்கியமானவைகள்

அல்ல. சிலுவையில் இருந்த கள்ளன் எந்த ஞானஸ்நானம் பெற்றான்? அவனை இன்று என்னுடனே கூட பரதீசியில் இருப்பாய் என்று ஆண்டவர் சொல்லவில்லையா? என்று தங்கள் மேதா விலாசத்தையும் வேத அறிவையும் வெளிப்படுத்தி சப்பைக் கட்டுக் கட்டலாம். ஆனால் சத்திய வேதம் இதைப் பற்றி என்ன சொல்லுகிறது என்று பார்க்க வேண்டாமா? விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் ''(மாற்கு 16:16) பேதுருவும் மற்ற அப்போஸ்தலர்களும் பெந்தேகோஸ்தே நாளில் கூடியிருந்த மக்களைப் பார்த்து'' நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக் கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் என்கிறார்கள். (அப் 2:38) அப்போஸ்தலனாகிய பவுல் தண்ணீர் ஞானஸ்நானத்தின் மூலம் நாம் கர்த்தரோடு அடக்கம் பண்ணப்படுகிறோம் என்று கூறுகிறார் (ரோமர் 6:3,4; கொலோ 2:12). நண்பர்களே, நீங்கள் உண்மையாகவே இரட்சிக்கப்பட விரும்பினால் இவைகளெல்லாம் முக்கியமான காரியங்கள் என்பதில் சந்தேகமே வேண்டாம். அதெல்லாம் உங்களுக்கு நோக்கமில்லை. இந்த உலகத்திலே மனிதனாகப் பிறந்து விட்டோம். நமக்கு ஒரு சமயமும் சபையும் வேண்டும். சபையில் இருந்தால் தான் ஆலயத்தில் திருமணம் கொடுப்பார்கள், அடக்கத்துக்குக் கல்லறையில் அனுமதிப்பார்கள். இப்படிப்பட்ட இவ்வுலகுக்குரிய நன்மைகள் போதும். பரலோகத்தை யார் பார்த்தார்கள்? என்றெல்லாம் நினைப்பீர்களானால் இதையெல்லாம் நீங்கள் படித்துக் கொண்டும், சிந்தித்துக் கொண்டும் இருப்பது வீண் வேலை தான்.

அதே போல, சபை விஷயத்தில் கூடத் தெளிவில்லாமல் தான் பெரும்பான்மையான மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். சபை ஒன்றா? பலவா? நீங்கள் கிறிஸ்து கட்டிய சபையில் அங்கம் வகிக்கிறீர்களா? அல்லது மனிதர்களால் ,தோற்றுவிக்கப்பட்ட சபைகள் என்கிற ஸ்தாபனங்கள் ஒன்றில் அங்கமாக இருக்கிறீர்களா? என்று கேட்டு விட்டால் சிலருக்கு வருகிற கோபம் இவ்வளவு அவ்வளவு என்று வர்ணிக்க முடியாது. ஏதோ கேட்கவே கூடாத அபச்சாரமான கேள்வியாகத்தான் அதை எண்ணுகின்றனர். என்ன ஐயா, அந்தச் சபை இந்தச் சபை என்று பேசி சபையைப் பிளவுபடுத்துகிறீர்கள்? சபையா ஐயா, இரட்சிக்கிறது? ஒருவன் எந்த சபையில் இருந்தால் என்ன? யோக்கியமாய், ஒருவனுக்கு கெடுதல் செய்யாமல் வாழ்ந்தால் போதும். மற்றது எல்லாம் வேண்டாத விவாதம் என்று கார சாரமாகப் பொரிந்து தள்ளுவர். இவர்களுடைய உணர்ச்சி வசப்பட்ட உரையைக் கேட்பதா? கர்த்தரு

டைய வார்த்தையை ஏற்றுக் கொள்வதா? சிந்தித்துப்பாருங்கள். ''நான் என் சபையைக் கட்டுவேன்'' என்றார் இயேசு (மத் 16:18) அதன் படியே அவர் கட்டவும் செய்தார். அப்போஸ்தலர் 'இரண்டாம் அதிகாரத்தில் முதன் முறையாக சுவிசேஷத்தைப் பிரகடனம் செய்தார்கள். சுமார் மூவாயிரம் பேர் அன்றைய தினம் இரட்சிக்கப்பட்டார்கள். ஆகவே முதல் முதலில் தோற்றுவிக்கப்பட்ட சபை, அதே பாணியைப் பின்பற்றி எங்கெல்லாம் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதோ, எங்கெல்லாம் மக்கள் விசுவாசித்துக் கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்களோ எவர்கள் எல்லாம் ஒன்று கூடி அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும் அப்பம் பிட்குதலிலும், ஜெபத்திலும் உறுதியாய்த் தரித்திருந்தார்களோ (அப் 2:38-47) எவர்கள் எல்லாம் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டார்களோ (அப் 11:26) அவர்கள் எல்லாம் கிறிஸ்துவின் சபையார்கள் (ரோமர் 16:16) அன்று மட்டுமல்ல இன்றும், இனி வரும் நாட்களிலும் அதே முறைகளைப் பின்பற்றி சபை நிறுவப்படலாம். அந்த ஒரு சபை தான் கர்த்தரால் கட்டப்பட்டது. (மத் 16:18) அந்த ஒரு சபைக்காகத் தான் கர்த்தர் தம் இரத்தத்தைச் சிந்தினார். (அப் 20:28) அவரே, அதன் இரட்சகன் (எபே 5:23) அதுவே அவருடைய பெயர் தரித்தது (ரோமர் 16:16) அதை மீட்டுக் கொள்வதற்காகவே அவர் மீண்டும் வருகிறார் (1தெச 4:16,17)

இப்பொழுது நாம் இவைகளையெல்லாம் சொல்லும் போது ஏற்றுக் கொள்ளாமல் நையாண்டி செய்வார்கள். நோவாவின் காலத்தில் கூட ஜலப் பிரளயத்தைப் பற்றி நோவா பிரசங்கித்த போது மக்கள் அவனை அசட்டை செய்தார்கள். ஆனால் ஒரு குறிப்பிட்ட காலத்தில் மழை வந்தது. வெள்ளம் பெருகியது. மக்கள் மடிந்து கொண்டிருந்த பொழுது தான் நோவாவின் எச்சரிப்பை நினைத்துப் பார்த்தனர். காலம் கடந்த சிந்தனை. பயன்தரவில்லை. அதுபோலவே கர்த்தர் தம்முடைய சபையை எடுத்துக் கொள்ள மீண்டும் வரும்போது சம்பவிக்கும். அப்பொழுது இரட்சிப்புக்கும் அழிவுக்கும் உள்ள வித்தியாசம் தெரிய வரும்.

கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் பெயரை மாத்திரமே தரித்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னாலும் அப்படித்தான், பெயரில் என்னையா இருக்கிறது? என்று கோபப்பட்டுக் கொள்கின்றனர். ஆனல் அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லையென்று வேதாகமம் கூறுகிறது. (அப் 4:12) உலக வழக்கில் எடுத்துக்கொண்டாலும் ஒருவன் தன் குடும்ப பாரம்பரியத்தைக் குறித்து பெருமிதம் கொள்கிறனே! அதே போல் நாம் அவரைப் பின்பற்றுபவர்களாகவும், அவருடைய குடும்பமாகிய சபையில் அங்கம்

வகிக்கிறவர்களாகவும், இருப்பதில் பெருமையுடையவர்களாய் இருக்க வேண்டாமா? தனிப்பட்ட முறையில் நாம் கிறிஸ்தவர்கள் (அப் 11:26) சபை என்று வரும் போது நாம் கிறிஸ்துவின், சபையார். (ரோமர் 16:16) அது நம்மை இன்னார் என்று அடையாளம் பிரித்து, நாம் கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்கள் என்று உலகுக்கு அறிவிக்கிறது. நாம் கிறிஸ்தவர்கள் தான் என்றால் அவருடைய பெயரைத் தரித்துக் கொள்ள ஏன் தயக்கம்? அவருடைய பெயரைத் தரித்துக் கொண்டு அவரைப் பெருமைப்படுத்த வேண்டும். அப்படிச் செய்யா விட்டால் அவர் பெயரைத் தரித்துக் கொள்ள நாம் வெட்கப்படுகிறோம் என்று பொருள். அவருக்குரிய இடத்தை எடுத்து மனிதர்களுக்கும், நாட்களுக்கும், பண்டிகைகளுக்கும் வேறு எதெதற்கோ சூட்டி மகிழும் நண்பர்களே! சிந்தியுங்கள்! நமக்காக சிலுவையில் மரித்தது யார்? கிறிஸ்துவா? மனிதனா? சாத்தானா? யாருடைய இரத்தத்தினாலே உங்கள் பாவங்கள் கழுவப்பட்டன? நீங்கள் எவர்களுடைய பெயரைத் தரித்துக் கொண்டீர்களோ அவர்களே உங்கள் இரட்சகர் என்று பொருள்படுகிறது. பாவியான ஒரு மனுஷன் இன்னொரு பாவியை இரட்சிக்க முடியாதே!

நண்பர்களே! மார்க்கம் சம்பந்தப்பட்ட காரியங்களில் நாம் யாரைப் பின்பற்றுகிறோம், எந்தச் சபையில் அங்கம் வகிக்கிறோம், நாம் எவ்வாறு ஆராதிக்கிறோம், நாம் என்ன பிரசங்கிக்கிறோம், நாம் எவ்வாறு வாழ்கிறோம் நம்முடைய நித்தியத்தை எங்கே கழிப்போம் என்பவைகள் எல்லாம் மிக மிக முக்கியம். இவைகளையெல்லாம் தேவையில்லாத விஷயங்கள் என்று அலட்சியப்படுத்தினால் தேவனையும், சட்ட நியாயங்களையும் அறிவுக்கேற்றவைகளையும், சத்தியத்தையும் அசட்டை பண்ணுவதற்குச் சமம். தேவன் சம்பந்தப்பட்ட அனைத்துக் காரியங்களும்; நமக்கும் தேவனுக்கும் உள்ள உறவு போன்ற காரியங்களும் நித்தியத்துக்கும் இருக்க வேண்டியவைகள். அதை உணர்ந்தவர்களாய் வாழ்வது புத்திசாலிகளின் கடமை.

J.C. சோட்

## அறிவுரை

''ஆதலால் கர்த்தர் நிமித்தம் கட்டுண்டவனாகிய நான் உங்களுக்குச் சொல்கின்ற புத்தி என்னவென்றால். நீங்கள் அழைக்கப் பட்ட அழைப்புக்கு பாத்திரவான்களாய் நடந்து, மிகுந்த மனத் தாழ்மையும், சாந்தமும், நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள். எபே 4-1-3

# ஜெபம் செய்யக் கற்றுக் கொள்வோம்!

ஜெபம் நமக்கு அளிக்கப்பட்ட அற்புதமான ஒரு சலுகையும் தேவ ஒத்தாசை பெற வல்லமையான ஒரு வழியுமாகும். தேவ குமாரன் மானிட அவதாரமெடுத்து இப்பூமியில் வாழும் போது, அவருடைய சீடர்கள் ஜெபத்தால் அடைந்த பலன்களால் விசுவாசத்தில் உறுதி பெற்றவராயிருந்தனர். பிதாவினுடைய குணாதிசயங்களை தெளிவாகப் பிரதிபலித்த இயேசு கிறிஸ்துவோடு வாழ்ந்த காரணத்தால், ஆவியில் பெலனடையவும் பிதாவின் உதவி பெறவும், வல்லமையான ஜெபம் செய்வதில் அவர்களும் ஆர்வமுற்றனர். ஜெபத்தில் நம்பிக்கை வைப்பதும், வாழ்க்கையின் எல்லா கட்டங்களிலும் அதை நடைமுறைப் படுத்துவதுமே இயேசு கிறிஸ்துவின் அடிச்சுவட்டைப் பின்பற்றும் வழியாகும். வல்லமையுடன் ஜெபம் செய்ய வாஞ்சிப்பதும், ஜெபம் செய்யும் முறையை நமது தேவனிடமிருந்து கற்றுக் கொள்வதும் கிறிஸ்துவைப் பின்பற்றும் நமது கடமை ஆகும்.

ஜெபம் செய்யும் சரியான முறையானது, ஜிம் மார்ட்டின் அவர்களின் ''வழி காட்டக் கற்றுக் கொள்'' எனும் வேதாகமப் பயிற்சித் தொகுப்பிலிருந்து கீழே தரப்பட்டுள்ளது :

**1. பிதாவாகிய தேவனை நோக்கி ஏறெடுத்தல் :**

''வானம், பூமி, சமுத்திரம் இவைகளையும், இவற்றில் அடங்கிய சகலவற்றையும் படைத்த கர்த்தாவே! நீரே தேவன் (அப் 4:24)

**2. துதித்தல் :** ''ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய தோத்திர பலியை அவர் மூலமாக எப்போதும் தேவனுக்குச் செலுத்தக் கடவோம்'' (எபி 13:15)

**3. நன்றி செலுத்துதல் :** நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை தோத்திரிப்போம்'' (எபே 5:20)

**4. பாவங்களுக்காக மனஸ்தாபப்படுதல் :** ''நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்'' (1யோவான் 1:9)

**5, விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் :** ஞானத்தைக் கேட்போம் (யாக் 1:5) நியாயமான தேவைகளைக் கேட்போம் (யாக் 4:3); வியாதிக்காரர் சுகம் பெற வேண்டுவோம் (யாக் 5:16:17)

அவருடைய சித்தத்தின்படி கேட்போம் (1யோவான் 5:14) தவறியவர்களை மீட்க வேண்டுவோம் (ரோமர் 10:1); சகல மக்களுக்காகவும், ஆட்சி புரிவோருக்காகவும் வேண்டுதல் செய்வோம் (1 தீமோ 2:1-3).

6. இயேசுகிறிஸ்துவின் நாமத்திலே : ''என் நாமத்தினால் நீங்கள் எதைக் கேட்பீர்களோ அதைச் செய்வேன்'' (யோவான் 14:14)-

நமது ஜெபங்கள் யாவற்றிலும் மேற்சொன்ன எல்லா பிரிவுகளும் இடம் பெற வேண்டிய கட்டாயமில்லை. ஆனால் ஒன்றும் ஆறும், அதாவது : பிதாவாகிய தேவனை நோக்கி ஆரம்பித்தலும், அவருடைய குமாரன் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் முடிப்பது இன்றியமையாதவை. சரியான முகவரி இல்லாத ஒரு கடிதம் உரியவரை அடையாதே! அதே போல ஜெபமும் உரியவராகிய பிதாவின் முகவரிக்குச் செல்ல வேண்டும். ''எங்கள் கர்த்தாவாகிய தேவனே!'', ''எங்கள் அருமையான பரலோக தந்தையே'', சர்வ வல்லமையுள்ள தேவனே!'' ,''பரலோகத்திலுள்ள எங்கள் பரிசுத்த பிதாவே!'' இப்படியாக பல பெயர்களில் தேவனை நோக்கி நமது ஜெபங்கள் ஆரம்பிக்கப் படவேண்டும்.

அடுத்து தபால் துறை வழியின்றி கடிதங்கள் உரிய இடத்திற்குப் போய் சேருமா? ஜெபத்திலும், நமது விண்ணப்பங்களை நமது இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் வழியாகவே தேவனிடம் சமர்ப்பிக்கிறோம். இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே அல்லது அவருடைய அதிகாரத்தின் படியே நமது ஜெபம் சரியான இடத்தை அடைகிறது. தபால் தலை ஒட்டாத கடிதம், சேர வேண்டிய இடத்திற்குப் போய்ச் சேராது. கிறிஸ்துவின் வழியாலன்றி ஜெபம் தேவனை அடையாது.

**நினைவிருக்கட்டும் :-** ''என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்'' (யோவான் 14;6) என்றார் இயேசுகிறிஸ்து. தேவனுக்கும் மனிதருக்கும் மத்தியஸ்தர் ஒருவரே; அவரே இயேசுகிறிஸ்து. (1தீமோ 2:5); அவர் நமது மகா பிரதான ஆசாரியர் (எபி 4:14). ''நீங்கள் என் நாமத்தினாலே வேண்டிக் கொள்வீர்கள். உங்களுக்காகப் பிதாவை நான் கேட்டுக் கொள்வேனென்று உங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. (யோவான் 16:26)

பிதாவை நோக்கி நீங்கள் ஜெபியுங்கள் : அவர் குமாரன் இயேசு கிறிஸ்துவின் வழியாக அவை செல்லட்டும். உங்கள் விசுவாசமுள்ள ஜெபங்கள் ஏற்றுக் கொள்ளப்படுவது உறுதி. தேவன் வாக்கு மாறாதவராயிற்றே!

**S.S. ராஜன்**

# ஒரு கிறிஸ்தவன் சோதனைகளை எவ்வாறு மேற்கொள்ளலாம்?

**I. தீய எண்ணங்கள் எதுவும் மனதில் இடம் பிடிக்க அனுமதியாமல் விழிப்புடன் இருக்க வேண்டும்.**

அ) எல்லாக் காவலோடும் உன் இதயத்தைக் காத்துக்கொள். அதனிடத்தினின்று ஜீவ ஊற்றுப் புறப்படும்.

உன் வாயின் தாறுமாறுகளை உன்னை விட்டகற்றி, உதடுகளின் மாறுபாட்டை உனக்குத் தூரப்படுத்து.

உன் கண்கள் நேராய் நோக்கக் கடவது. உன் கண்ணிமைகள் உனக்கு முன்னே செவ்வையாய்ப் பார்க்கக் கடவது.

உன் கால் நடையைச் சீர்தூக்கிப்பார்; உன் வழிகளெல்லாம் நிலைவரப்பட்டிருப்பதாக.

வலது புறமாவது இடது புறமாவது சாயாதே; உன் காலைத் தீமைக்கு விலக்குவாயாக! (நீதி 4:23-27)

**ஆ) கீழ்ச் சொல்லப்பட்டிருக்கும், சில காரியங்களைக் கிரமமாகவும், தவறாமலும் கடைப் பிடித்தால் வெற்றி நிச்சயம்.**

1. சத்திய வேதத்தை ஒழுங்காக வாசித்து அதன்படி நடக்க வேண்டும் சங் 119:11

2. உன் எண்ணங்களையும் சிந்தனையையும் அடக்கி ஆள். 2 கொரி 10:4:5

3. சாத்தான் எந்தக் கோணத்தில் நம்மைத் தாக்குவான் என்று நமக்குத் தெரியாதாகையால் எப்போதும் தயார் நிலையில் இருக்க வேண்டும். (1 யோவான் 2:15-17)

4. உன் இதயத்தில் எப்போதும் நேர்மையான சிந்தனையே நிறைந்திருக்கும்படி கவனமாயிரு (பிலி 4:8)

5. தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தைத் தரித்துக் கொண்டு கர்த்தரிடத்திலும், அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள். எபே 6:10-17

7. எப்போதும் தேவனையே தியானித்துக் கொண்டிரு.

II ஜெப வாழ்க்கையே வெற்றி வாழ்க்கை என்பதை உணர்ந்து, மன்றாடுங்கள்.

1) இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள். (1தெச5:17)

2) சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ணுங்கள். (லூக்18:1)

3) அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால் உங்கள் கவலைகளையெல்லாம் அவர் மேல் வைத்து விடுங்கள் 1பேது 5:7

4) நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல் எல்லாவற்றையும் குறித்து, உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரதோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். பிலி 4:6

III இயேசுவையே உங்கள் முன் மாதிரியாக வைத்துக் கொள்ளுங்கள்

அ) .... விசுவாசத்தைத் துவக்குகிறவரும், முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமிக்கப்பட்ட ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம் எபி 12;1.
... நீங்கள் இளைப்புள்ளவர்களாகி, உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்து போகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட விபரீதங்களைச் சகித்த, அவரையே நினைத்துக் கொள்ளுங்கள். (எபி 12:3)

ஆ) நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக் கூடாத பிரதான ஆசாரியர் நமக்கு இராமல், எல்லா விதத்திலும், நம்மைப் போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யும் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத் தண்டையிலே சேரக் கடவோம். (எபி 4:15,16)

இ) .... நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை; உன்னைக் கைவிடுவதும் இல்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே: அதினாலே நாம் தைரியம் கொண்டு, கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன். மனுஷன் எனக்கு என்ன செய்வான்? என்று சொல்லலாமே. (எபி 13:5,6)

ஈ) .... தேவன் நம்பட்சத்தில் இருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? (ரோமர் 8:31)

உ) ... ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி, உங்களுக்கு மாதிரியைப் பின் வைத்துப் போனார். (1பேது 2:21)

**IV தகுதியான நபர்களை கூட்டாளிகளாகத் தெரிந்து கொள்ளவேண்டும்.**

அ) மோசம் போகாதிருங்கள் தகாத நட்பு நல்லொழுக்கங்களைக் கெடுக்கும். (1 கொரி 15:33)

ஆ) என் மகனே, பாவிகள் உனக்கு நயம் காட்டினாலும் நீ சம்மதியாதே.

எங்களோடே வா, இரத்தம் சிந்தும்படி நாம் பதிவிருந்து குற்றமற்றிருக்கிறவர்களை முகாந்தரமின்றிப் பிடிக்கும்படி ஒளிந்திருப்போம்,

பாதாளம் விழுங்குவதுபோல் நாம் அவர்களை உயிரோடே விழுங்குவோம். குழியில் இறங்குகிறவர்கள் விழுங்கப் படுவது-போல அவர்களை முழுவதும் விழுங்குவோம். விலையுயர்ந்த சகலவிதப் பொருள்களையும் கண்டடைவோம். கொள்ளைப் பொருளினால் நம்முடைய வீடுகளை நிரப்புவோம்.

எங்களோடே பங்காளியாயிரு நம்மெல்லாருக்கும் ஒரே பை இருக்கும் என்று அவர்கள் சொல்வார்களாகில்,

என் மகனே, நீ அவர்களோடே வழி நடவாமல், உன் காலை அவர்கள் பாதைக்கு விலக்குவாயாக (நீதி 1;10-15)

இ) துன்மார்த்தருடைய பாதையில் பிரவேசியாதே; தீயோரு-டைய வழியில் நடவாதே

அதை வெறுத்து விடு, அதன் வழியாய்ப் போகாதே; அதை விட்டு விலகிக் கடந்து போ. (நீதி 41;4,15)

உ) முன்புபோல துன்மார்க்க உளையிலே அவர்களோடே கூட நீங்கள் விழ மறுப்பதாலே அவர்கள் எரிச்சலடைந்து உங்களைத் தூஷிப்பார்கள் அதைப்பற்றிக் கவலைப் படாதே (1பேது 4;4)

**V. நீங்கள் வீட்டிலோ, பணி மனையிலோ, போக்கும் போதோ, கர்த்தருடைய பணியைச் செய்யும்போதோ, எல்லா சமயத்திலும் நன்மை செய்யவே நாடுங்கள்.**

(அ) ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்-தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து நீங்கள் உறுதிப்பட்டவர்களாயிருந்து, அசையாதவர் களாயும் கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகு கிறவர்களாயும் இருப்பீர்களாக'' 1 கொரி 15:58

(ஆ) மேலும், உத்தமமானவைகளை நீங்கள் ஒப்புக்கொள்ளத்தக்கதாக உங்கள் அன்பானது அறிவிலும், எல்லா உணர்விலும், இன்னும் அதிகதிகமாய்ப் பெருகவும்.

தேவனுக்கு மகிமையும், துதியும் உண்டாகும்படி இயேசு கிறிஸ்துவினால் வருகிற நீதியின் கனிகளால் நிறைந்தவர்களாகி,

நீங்கள் கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்புரவானவர்களும் இடறலற்றவர்களுமாயிருக்கவும் வேண்டுதல் செய்கிறேன்.

(இ) அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக் கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்ய பக்தி வைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தார். (தீத்து 2:14)

**VI கர்த்தருடைய காரியங்களுக்கு எதிராக நடைபெறும் எந்தக்காரியத்தையும் எதிர்த்துப் போராடு; சில காரியங்களில் அவைகளுக்கு விலகியோட வேண்டிய சூழ்நிலைகள் ஏற்பட்டால் அது கோழைத் தனமென்று தயங்கி அதில் மாட்டிக் கொள்ளாதே. விவேகம் வேறு; கோழைத்தனம்வேறும்**

(அ) பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள் அப்பொழுது அவர் உங்களை விட்டு ஓடிப்போவான். (யாக் 4:7)

(ஆ) பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள் (1 தெச 5:22)

(இ) கர்த்தர் தம்முடையவர்களை அறிவாரென்பதும், கிறிஸ்துவின் நாமத்தைக் சொல்லுகிறவனும் அநியாயத்தை விட்டு விலகக் கடவன் என்பதும் அதற்கு முத்திரையாக இருக்கிறது (2தீமோ 2:19)

**VII சாத்தனுக்கல்ல—கர்த்தருக்கே உங்கள் சரீரத்தையும் மனதையும் ஒப்புக் கொடுத்து அவரை மகிமைப் படுத்த வேண்டும்.**

அ) கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்கள், ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள் (1கொரி 6:20)

ஆ) 1) நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாக பாவத்திற்கு ஒப்புக் கொடாமல், உங்களை மரித்-

தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாக தேவனுக்கு ஒப்புக் கொடுத்து உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாக தேவனுக்கு ஒப்புக் கொடுங்கள் (ரோமர் 6:13)

2) ..அக்கிரமத்தை நடப்பிக்கும்படி முன்னே நீங்கள் உங்கள் அவயவங்களை அசுத்தத்துக்கும், அக்கிரமத்திற்கும் அடிமைகளாக ஒப்புக் கொடுத்தது போல இப்பொழுது பரிசுத்தமானதை நடப்பிக்கும்படி உங்கள் அவயவங்களை நீதிக்கு அடிமைகளாக ஒப்புக் கொடுங்கள். ரோமர் 6:19

இ) ..சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன். (ரோமர் 12:1)

**VIII தீமையை எதிர்த்துப் போராடத் திராணியைத் தர வேண்டுமென்று ஜெபித்து, அவருடைய வார்த்தையின் படியும் அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றியும் உறுதியுடன் இருந்தால் வேதனைகளுக்கு தப்பித்துக் கொள்ளும் வழியைக் காட்டுவேன் என்று கர்த்தர் வாக்குக் கொடுத்திருக்கிறார் என்று தைரியமாயிரு**

அ) மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுவதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத் தக்கதாக, சோதனையோடு கூட அதற்குத் தப்பிக் கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார். 1கொரி 10:13

ஆ) என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலன் உண்டு. (பிலி4:13)

**பிரிவினை பாவம்**

பிரிவினை பாவமாகும். கலா 5:20; 1கொரி 1:10-17 புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்டுள்ள திட்டத்தின் படி இல்லாத ஒரு திருச்சபையை ஏற்படுத்துவதோ, அதற்கு உதவி செய்வதோ பாவமாகும். இவ்வாறு தனி மனிதர் செய்தாலும் அல்லது பலர் கூட்டாகச் சேர்ந்து செய்தாலும் பாவமாகும். புதிய ஏற்பாட்டைக் கவனமாய் வாசி. அதில் திருச்சபையைக் கட்டுவதற்கும், நடத்துவதற்கும் உரிய திட்டம் முழுமையாக கொடுக்கப் பட்டிருக்கிறது. இது விஷயத்தில் மாந்தஅறிவை நாடுவது அறியாமை.

# ஒரு கிறிஸ்தவனுக்குக் கிடைக்கும் ஆசீர்வாதங்கள்

1. புத்திர சிலாக்கியம் — கலா 3:26
2. ஆவிக்குரிய எல்லா ஆசீர்வாதங்கள் — எபே 1:3
3. தேவனால் தெரிந்து கொள்ளப்படும் பேறு — எபே 1:4
4. அவருடைய இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு — எபே 1;7
5. பரலோகத்தில் அழியாத நித்திய சுதந்திரம் — எபே 1:11
6. கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவ அன்பு — ரோமர் 8:39
7. பழையவைகள் ஒழிந்துபோய் புது சிருஷ்டிப்பு — 2 கொரி 5:17
8. தேவனோடு ஒப்புரவு — 2 கொரி 5:19
9. கிறிஸ்துவுக்குள் தேவநீதி ஆக்கப்படல் — 2 கொரி 5:21
10. நித்திய மகிமையோடே கூடிய இரட்சிப்பு — 2 தீமோ 2:10
11. கிறிஸ்து உங்களுக்குள்ளே வல்லமையாய்க் கிரியை நடப்பிப்பார். — கொலோ 1:29
12. நித்திய ஜீவனைப் பற்றிய நம்பிக்கை — தீத்து 1:3
13. எல்லாபுத்திக்கும் மேலான தேவ சமாதானம் — பிலி 4:7
14. கர்த்தருக்குள் எப்பொழுதும் மகிழ்ச்சி — பிலி 4:4
15. நம்முடைய குறைவுகள் நிறைவாக்கப்படல் — பிலி 4:19
16. வாழ்க்கையின் நோக்கத்தைப் பற்றிய தெளிவான பார்வை — பிலி 1:21, 3:13, 14
17. மரணத்தைப் பற்றிய பயம் நீக்கம் — பிலி 1:23, 2 தீமோ 4:6-8;
18. ஜெபத்தினால் கிடைக்கும் ஆறுதலும் நம்பிக்கையும் — 1 பேது 5:7
19. தேவைக்கேற்பக் கிடைக்கும் இரக்கமும் கிருபையும் — எபி 4:16
20. இம்மையிலும் மறுமையிலும் பரிபூரண வாழ்வு — யோவான் 10:10

21. ஒருவருக்கொருவர் அன்பினால் இணைக்கப்-
பட்டிருக்கும் கிறிஸ்தவ ஐக்கியம் கொலோ 2:2

22. உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதும் இல்லை என்கிற வாக்குத் தத்தம் எபி 13:5

23. உனக்காகத் தன் இன்உயிரை ஈந்த இயேசு கிறிஸ்துவின் நட்பு. யோவான் 15:13 கலா 3:20

24. உனக்கும், தேவனுக்கும் மத்தியஸ்தராக விளங்கும் இயேசு 1தீமோ 2:5.

25. உனக்காக பிதாவினிடத்தில் பரிந்துரை செய்யும் செய்யும் தேற்றரவளான இயேசு. 1யோவான் 2:1

26. உண்மையும், இரக்கமுள்ள இயேசு நமக்குப் பிரதான ஆசாரியர். எபி 2:17,18; 4:15

27. உன் பாவங்களைச் தன் சரீரத்தில் சுமந்த இயேசுவின் தியாகம், 1பேது 2:24

28. எப்பொழுதும் உயிரோடிருந்து தேவனிடத்தில் சேருகிறவர்-களின் நலனில் அக்கறை கொண்டு, பரிந்துரை செய்யவும், இரட்சிக்க வல்லமையுள்ளவருமான இயேசுவின் அன்பும் கரிசனையும். எபி 7:25

29. உன்னைப்பற்றி நன்கு தெரிந்த இயேசுவை அப் 17:30,31 நியாயாதிபதியாகப் பெற்றிருக்கும் கிருபை 2கொரி 5:10,11

## ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் ஏற்படும் துன்பங்கள்

1. சோதனைகளும், வேதனைகளும் யாக் 1:2-4

2. உபத்திரவங்களும், துன்பங்களும் 1பேது 4:12-16

3. முன்னுள் நண்பர்கள் உங்களைப் பற்றி தீமையாகப் பேசும் சூழ்நிலை. 1பேது 4:2-5

4. உலகத்திலிருந்து பிரிந்து நிற்க வேண்டிய கட்டாயம். 2கொரி 6:17

5. கர்த்தருக்கு ஒப்புக் கொடுத்து, தியாக வாழ்வு வாழ வேண்டிய தீர்மானம். ரோமர் 12:1,2

6. உலகத்துக்கடுத்த காரியங்களில் நாட்டத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டும். 1யோவான் 2:15-17

7. உலகம் பெரிதாகப் போற்றும் பண ஆசை வெறுக்க வேண்டும். 1தீமோ 2:6-10

8. சுயவெறுப்பு. மத் 16:24

9. சுயவெறுப்பு வாழ்க்கை ரோமர் 6:1-23

10. மாமிச சிந்தையை அகற்ற வேண்டும் கலா 5:19:21

11. தீய பழக்கங்களை அறவே விட்டுவிட வேண்டும். கொலோ 3:5-14

**தேவனிடத்திலிருந்தும் அவருடைய பிள்ளைகளிடத்திலிருந்தும் இவ்விதத் துன்பங்களைத் தாங்குவதற்குக் கிடைகரும் ஒத்தாசைகள்**

1. தேவன் கட்டளையிட்டிருக்கிற காரியங்களை நடப்பிக்கப் பெலன் பிலி 4:13

2. ஜெபத்தின் மூலமாகக் கிடைக்கும் வல்லமை யாக் 5:16

3. சோதனைகளைத் தாங்கத் தக்க வழிகள் 1 கொரி 10:13.

4. கிறிஸ்துவுக்குள் இருக்கிற சகோதர சகோதரிகளின் ஆலோசனைகளும், ஆறுதலும் .. கலா 6:1,2

5. உங்களுக்குள்ளே கிரியை நடப்பித்து உங்களைப் பலப்படுத்துகிற வசனங்கள் 1தெச 2:13, யாக் 1:21

6. உங்களைச் சாத்தான் எளிதில் தாக்கமுடியாதபடி கொடுத்திருக்கிற தேவனுடைய சர்வாயுதவர்க்கம் எபே 6:10-17

7. உங்களில் இருக்கிறவர் சாத்தானை விட வல்லமையுள்ளவர் என்ற உறுதிமொழி 1யோவான் 4:4

8. கிறிஸ்துவுக்குள் அவர்மேல் உள்ள நம்பிக்கையினால் நிச்சயமான வெற்றி உண்டு என்ற வாக்குறுதி 1யோவான் 5:4;1 1கொரி 15:57

9. உங்கள் இருதயத்தில் தேவ வசனங்களைத் தியானித்துக் காத்துக் கொண்டால் நீங்கள் பலமடைவீர்கள் என்ற அறிவுரை 1யோவான் 2:14

10. நீங்கள் உலகத்தை வெறுத்துக் கர்த்தரை அண்டிக் கொண்டால் அவர் உன்னை ஆதரிப்பார் 2கொரி 6:17,18

# தெரிந்து கொள்ளுங்கள்

கிறிஸ்து பிறப்பதற்கு சுமார் ஐம்பது ஆண்டு காலத்துக்கு முன்னும் பின்னும் உள்ள உலக வரலாறு மிக முக்கியமானது. அந்நாட்களின் ரோமப் பேரரசு உலகப் புகழ் பெற்று விளங்கியது. அதனுடைய பிரதிநிதியாகவும், சிற்றரசனாகவும் ஏரோது என்னும் இதுமேய யூத வம்சம் ஆட்சி புரிந்தது. அவர்களுடைய ஆட்சியின் போது தான் இயேசுவும் வாழ்ந்தார். அவருடைய பிறப்பு, வளர்ப்பு, ஊழியம் மரணம் உயிர்த்தெழுதல்யாவும் இவர்கள் காலத்தில் தான் நடைபெற்றது. ஆகவே இவர்களைப் பற்றி நாம் தெரிந்து கொள்வது, சுவிசேஷத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்வதற்குத் துணை செய்யும்.

**1. இந்த ஏரோது வம்சத்தாரில் புகழ் பெற்றவனும் கொடியவனும் பெரிய ஏரோது என்று அழைக்கப்படுபவன்** கி.மு 40-4 வரை யூதர்களுக்கு இராஜவாக இருந்தான். இவன் கி.மு 73-ல் பிறந்தான்.

இவருடைய தகப்பனார் இதுமேயா நாட்டு யூத குலத்தைச் சேர்ந்தவன். ரோமப் பேரரசு யூதேயாவை வென்று அங்கு கால் ஊன்றிய காலத்தில் இவன் எப்படியோ ரோமர்களுடைய நம்பிக்கையைப் பெற்று கி.மு. 47ல் யூதேயாவின் ஆளுநராக ஜூலியஸ் சீசர் என்ற ரோமப் பேரரசனால் நியமிக்கப்பட்டான்.

இவன் ஆளுநர் பதவி ஏற்றவுடன் தன்னுடைய குமாரரில் ஒருவனையே கலிலேயா பகுதியின் காவல்துறைக்கு உயர் அதிகாரியாக நியமித்துக் கொண்டான். அந்தப் பகுதியில் ரோமருக்கு எதிராக எந்தக் கலகமும், புரட்சியும் ஏற்படா வண்ணம் அவன் திறமையாகக் கண்காணித்து அந்நாளில் சீரியா தேசத்து ரோமப் பிரதிநிதியாக இருந்த சீரியா நாட்டு ஆளுநர் வந்தான். இவனுடைய திறமையான நிர்வாக முறையைப் பார்த்துப் பாராட்டி அவனைத் தன்னுடைய பகுதியின் காவல் துறைக்கும் பொறுப்பாளி ஆக்கினான். ஜூலியஸ் சீசர் மரணத்துக்குப் பிறகு ஏற்பட்ட உள்நாட்டுப் பதவிச் சண்டையில் வெற்றி பெற்ற அந்தோணியின் நல்லெண்ணத்தை ஏரோது பெற்றிருந்தபடியால் கி.மு. 40-37ல் பார்த்தியர்கள் சீரியாவையும், பாலஸ்தீனத்தையும் கைப்பற்றித் தங்கள் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வர முயன்றபொழுது, அந்தோணி, ஆக்டேவியன் ஆகியோருடைய ஆலோசனைப்படி, ஏரோதை "யூதர்களுடைய இராஜா" என்று பட்டம் சூட்டி யூதேயாவின் முழுப் பொறுப்பையும் ஏரோதின் கையில் ஒப்படைத்தனர்.

இவன் அந்தப் பட்டத்தை நிலை நாட்டிக் கொள்வதற்கு மூன்று ஆண்டு காலம் கடுமையாகப் போராடித் தக்க வைத்துக் கொண்ட பிறகு முப்பத்தி மூன்று ஆண்டுகள் யூதேயாவை ஆட்சி செய்து ரோமப் பேரரசின் உற்ற நண்பனாக நட்புடன் நடந்து கொண்டான்.

ஏரோது அந்தோணியின் நல்லெண்ணத்தைப் பெற்றிருந்த போதிலும் அவனுடைய ஆசை நாயகி கிளியோபத்திராவின் எதிர்ப்பு காரணமாக கி.மு. 31வரை ஆட்டம் கண்ட வண்ணமாகவே இருந்தது. அந்த அம்மாளுக்குத் தன் முன்னோர்களின் வம்சமான ப்தோலமி வம்சத்தாரில் ஒருவனை நியமித்து யூதேயாவையும், சீரியாவையும் இணைத்து தன் வம்ச ஆட்சிக்கு புத்துயிர் கொடுக்க வேண்டும் என்று ஒரு நப்பாசை ஆக்டியம் (actium) யுத்தத்திற்குப் பிறகு அகுஸ்துராயன் ரோமப் பேரரசின் சக்கரவர்த்தி ஆனதும் நிலைமை ஏரோதுக்குச் சாதகமானது ஆயினும் ஏரோது நிம்மதிப் பெருமூச்சு விடுவதற்கு விட முடியாதபடி வேறொரு கோணத்திலிருந்து அவனுடைய ஆட்சிக்குப் பிரச்னை உருவானது, ஹாஸ்மோனியன் குடும்பத்தாருக்கு, கிளியோபத்திராவின் முயற்சியால் ஆட்சிப் பீடம் கிடைத்தாலும் கிடைக்கலாம் என்ற சூழ்நிலை உருவாகிப் பின்னர் அகஸ்து ராயனுடைய கை ஓங்கினதால் கைமாறிப் போன ஏமாற்றம் அவர்களுக்கு ஒரு விதமான அதிருப்தியைத் தோற்றுவித்திருந்தது. இத்தனைக்கும் ஏரோது அதே குடும்பத்தைச் சேர்ந்த முன்னாள் பிரதான ஆசாரியனான ஹைர்கானஸ் (Hyrcanus II) என்பவரின் பேத்தியாகிய மரியம்நே (Mariamne) என்பவளைத் திருமணம் செய்திருந்தான். ஆனாலும் ஹாஸ்மோனியக் குடும்பத்தில் தனக்குப் போட்டியாக முளைக்கலாம் என்று கருதியவர்களையெல்லாம் ஒருவன் பின் ஒருவராக ஒழித்துக் கட்டி விட்டு, இறுதியாகத் தன் மனைவியாகிய மரியம்நேயையும் கூட கி.மு. 29ல் முடித்துக் காட்டி விட்டான். மேலும் ஏரோது யூதேயாவுக்கு வட கிழக்குப் பகுதிகளைக் கைப்பற்றி ரோமப் பேரரசோடு இணைப்பதில் வெற்றி கண்டான். அதையும் அகஸ்து ராயன் இவன் வசமே ஒப்புவித்து விட்டான். மேலும் இவன் ரோமப் கலாச்சாரத்தைப் பரப்பும் வகையில் பல கட்டிடங்களை தன் ஆட்சியின் கீழ் இருந்த நகரங்களிலும் ஏதன்ஸ் போன்ற அந்நிய நகரங்களிலும் கட்டுவித்தான் அவனுடைய ஆட்சியின் கீழ் இருந்த சமாரியாவைப் புதுபித்து அதற்கு (Sebaste) என்று பெயரிட்டு அகுஸ்துராயன் பெயரைப் பெருமைப் படுத்தினான். (செபஸ்டி என்ற கிரேக்க சொல்லுக்கு லேட் (lad) என்பது இலத்தீன் சொல், அதற்கு அகஸ்துராயன் என்று பொருள்)

மேலும் மத்தியதரைக் கடற்கரை யோரமாயிருந்த ஸ்ராட்டோ (Strato) கோபுரத்தைப் புதுப்பித்து ஒரு அழகிய செயற்கைத் துறைமுகத்தை நிர்மாணித்து அதற்குச் ரோமச் சக்கரவர்த்தி என்று அர்த்தம் கொள்ளும் செசரியா என்று பெயர் சூட்டினான் அது போக நாட்டின் எல்லாப் பகுதிகளையும், தேவைப்படும் மாற்றங்களைச் செய்து பலப்படுத்தினான்.

எருசலேம் நகரின் மேற்குச் சுவரையொட்டி தனக்கு ஒரு அரண்மனையைக் கட்டிக் கொண்டான். அதற்கு முன்னரே தேவாலயத்தின் வடமேற்குப் பகுதியில் அந்தோனியின் பெயர் விளங்கும் வகையில் அந்தோனியா கோட்டையைக் (Antonia fortress) கட்டினான். அவன் இப்படிப்பல கட்டிடங்களையும், கோட்டைகளையும் நிர்மாணித்திருந்த போதிலும் கி.மு. 19ல் இவன் நிர்மாணித்த எருசலேம் தேவாலயமே மிகப் பெரியதும் புகழ் வாய்ந்ததாகும்.

ஏரோது செய்த காரியங்கள், மிகுந்த பொருட்செலவில் கட்டப்பட்ட எருசலேம் தேவாலயம் கூட ஏரோது மீது யூத மக்களுக்கு இருந்த கசப்புணர்வை நீக்க முடியவில்லை. அவன் ஏதோமியர் வழி வந்த நபர் என்பதை அவர்களால் மறக்க முடியவில்லை. அவனுக்கு உண்மையான யூத மார்க்க வைராக்கியம் இருந்திருந்தால் மற்ற தேவதைகளுக்கும், விக்கிரகங்களுக்கும் கோவில்கள் எழுப்பியிருக்க மாட்டானே! மேலும் அவன் ஹாஸ்மோனியன் குடும்பத்தை பூண்டோடு ஒழித்துப் போட்டதை அவர்களால் மறக்கவோ மன்னிக்கவோ முடியவில்லை.

அவனுடைய கடுமையான சட்ட திட்டங்களும், அவைகளை நடைமுறைப் படுத்திய முறைகளும் மக்கள் மத்தியில் இருந்த அதிருப்தியையும், பிரச்சனைகளையும் சமாளிக்க உதவவில்லை. அவனுடைய பெண் உறவினர்களுக்கும், அவனுடைய மனைவிமார்களுக்கும் எப்போதும் ஓயாத சண்டைகளும், மன வருத்தங்களும் உண்டு. அதே போன்று அவனுடைய பல மனைவிகளுக்கும் பிறந்த மக்களுக்குள்ளும் போட்டியும் பொறாமையும் சண்டைகளும் நித்திய நிகழ்ச்சி அவனுக்கு யூத மனைவியாகிய மரியம்நே மூலமாகப் பிறந்த அலெக்ஸாண்டர், அரிஸ்டோபலஸ் என்ற மகன்கள் ரோமாபுரியில் பட்டத்து இளவரசர்களாக வளர்க்கப்பட்டார்கள் அவர்களுடைய தாயார் ஹாஸ்மோனியர் குடும்பத்தில் பிறந்த பெண்ணாக இருந்தபடியால் யூதர்கள் ஒருவாறு அவர்களைத் தங்கள் அதிபதியாக ஏற்றுக் கொள்ள விருப்பமுள்ளவர்களாக இருந்தனர். ஆனால் அப்படிப்பட்ட எண்ணத்தோடு வளர்க்கப்பட்டு வருகிறார்கள் என்று அறிந்த அவர்களுடைய மற்ற சகோதரர்கள் குறிப்பாக அவனுடைய மூத்த மகன் அந்திப்பத்தர் அந்த இரண்டு

சகோதரர்களுக்கும் எதிராக ஏரோதின் மனதில் தப்பபிப்பிராயம் ஏற்படும்படி நஞ்சைப் பாய்ச்சுவதில் வெற்றி பெற்று விட்டான். அதன் விளைவாக கி.மு. 7ல் தங்கள் தகப்பனாருக்கு எதிராகச் சதி செய்தார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டு, தூக்கிலிடப்பட்டார்கள் ஆனாலும், இந்தச் சதித் திட்டத்தால் ஏற்பட்ட கொலையில் அந்திப் பத்தர் போட்ட கணக்கு தவறுதலாகப் போய் விட்டது. அவர்கள் மரணத்துக்குப் பிறகு மூன்று ஆண்டுகள் கழித்து அதாவது கி.மு. 4ல் ஏரோது மரிப்பதற்குக் கொஞ்ச நாள் முன்பு ஏரோதின் சந்தேகப் பார்வை அந்திப்பத்தர் மேல் பாய்ந்து அவனையும் கொலைக்களத்துக்கு அனுப்பிவிட்டது.

ஏரோது எவ்வளவு சந்தேகப் பேர்வழி என்பதற்கு சாஸ்திரிகளின் வருகையும் அதைத் தொடர்ந்து பெத்லேகேமில் உள்ள குழந்தைகள் பலர் கொல்லப்பட்டதையும் ஓர் சிறந்த எடுத்துக்காட்டாகக் கூறலாம் (மத் 2:1-16). இந்நிகழ்ச்சியைப் பற்றி வேதாகமம் தவிர மற்ற வரலாற்று ஆசிரியர்கள் எவரும் இதைப் பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை, இருப்பினும் யூதர்களுக்கு வேறொரு ராஜா எழும்புகிறார் என்று ஒரு சிறு சந்தேகம் ஏற்பட்டாலும் அவன் மிகவும் கலங்கித் திகைத்துப் போவான் என்பது வெள்ளிடை மலை. இந்தச் சந்தேகப்பார்வையின் காரணமாக இவனுடைய ராஜ்ய பரிபாலன நிர்வாக முறையை விட அவன் கொன்று குவித்த பிணங்களின் எண்ணிக்கையே மக்களுடைய மனதில் நின்றது.

இவனுடைய மரணத்துக்குப் பிறகு இவனுடைய ஆட்சியின் கீழிருந்த பகுதிகளைத் தன் மூன்று குமாரர்களுக்குக் கீழ்க்கண்டவாறு பிரித்துக் கொடுக்கப்பட வேண்டும் என்று உயில் எழுதி வைத்தான் (யூதேயாவும், சமாரியாவும்-அர்க்கிலேயு என்பவனுக்கும், (மத் 2:22), கலிலேயா, பெரேயா பகுதிகள் அந்திப்பாவுக்கும், வடகிழக்குப் பகுதிகள் ஆகிய இத்துரேயா, திராகொணத்தி நாடுகள் பிலிப்புக்கும்). ரோமச் சக்கரவர்த்தி ஏரோது தன் வாழ் நாளெல்லாம் ரோமப் பேரரசின் உற்ற நண்பனாக நடந்து கொண்டதைக் கௌரவிக்கும் வகையில் அதை அப்படியே நிறைவேற்றி வைத்தான்.

**2. அர்க்கிலேயு தன் தகப்பனாரின் உயில்படி யூதேயாவுக்கு அதிபதியானான்** (மத் 2:22) ஆனால் ''ராஜா'' என்ற பட்டம் கிடையாது. இவன் பெரிய ஏரோதுக்கு மல்த்தாஸ் (malthace) என்ற சமாரியா மனைவி மூலம் பிறந்த முதல் மகன். தகப்பனைப் போலவே கொடியவன். இவன் தன் ஒன்று விட்ட சகோதரன் அலெக்ஸாண்டரின் விதவை ''க்ளாபைரா'' (Glaphyra) என்பவளை மணந்து கொண்டான். இது யூதர்களுடைய மத உணர்வைப் புண்படுத்தின. இவன் தன் தகப்பனைப் போலவே கட்டிடப் பிரியன்

மக்கள் நலனைப் பற்றி சிறிதும் கவலைப்படாமல், கூட்டாட்சி நடத்தி வந்தான். தாங்க முடியாத வரி, அதிகாரிகளின் ஊழல் எல்லாம் மக்களுக்கு வெறுப்பை உண்டுபண்ணியது.

யூதேயா மற்றும் சமாரியாவில் உள்ள செல்வாக்குள்ள பிரஜைகள் கூட்டம் கூடி, இவனுக்கெதிராக பிராது மனு தயாரித்து அகஸ்துராயனுக்கு அனுப்பினர். அதில் இவனுடைய ஆட்சியை உடனடியாக மாற்றி அமைக்காவிட்டால் பெரிய கலவரம் வெடிக்கும் என்று கடுமையாக எச்சரித்து அகஸ்துராயன் இவனை ஆட்சியிலிருந்து நீக்கி, நாடு கடத்த உத்திரவிட்டான். அதுமுதல் யூதேயா நேரடியாக ரோமப் பேரரசின் நேரடிப் பார்வையில் இராஜப் பிரதிநிதிகளால் ஆளப்பட்டது. அந்த வரிசையில் பொந்தியிலாத்து ஐந்தாவது நபர்.

**3. கால்பங்கு தேசாதிபதியாகிய ஏரோது** லூக் 3:19: இவனுடைய இயற்பெயர் அந்திப்பா. இவன் சமாரியா மனைவி மல்த்தாஸ் (malthace) மூலம் பிறந்த இளையவன். தமயனாகிய பெரிய ஏரோதின் உயிலின்படி கலிலேயாவும் பெரேயாவும் கொடுக்கப் பட்டது. இவனைப் பற்றிச் சொல்ல வேண்டும் என்றால், யோவான் ஸ்நானகனைச் சிறை வைத்துப் பின்னர் சிரச்சேதம் செய்தது தான் (மாற்கு 6:14-28) இயேசு கிறிஸ்துவைக் கூட இவன் நேரில் பார்த்திருக்கிறன். பிலாத்து இயேசுவை நியாயம் விசாரிக்க இவனிடம் அனுப்பி வைத்தான். (லூக் : 23-7 முதல்) ஏரோது குமாரர்களில் இவனே மிகவும் சூட்டிப்பானவன். இவன் தந்தையைப் போலவே கட்டிடப் பிரியன். கலிலேயா ஏரிக்கரையில் அமைந்துள்ள திபேரியா நகரை கி.பி. 22-ல் நிறுவினான். அதற்கு சக்கரவர்த்தி திபேரியு ராயனுடைய பேரைச் சூட்டினான் இவன் நாபாத்திய அரசனாகிய அரேட்டாஸ் என்பவனுடைய மகளை மணந்தான். ஆனால் சிறிது நாட்களில் அவளை விவாகரத்து செய்து விட்டு, அவனுடைய ஒன்று விட்ட சகோதரன். பிலிப்பு என்பவனின் மனைவியை மணந்து கொண்டான். சுவிசேஷ எழுத்தாளர்கள் இவனுடைய இரண்டாவது திருமணத்தை யோவான் ஸ்நானகன் வன்மையாகக் கண்டித்ததினால் அவன் யோவான் ஸ்நானகன் மீது கோபப்பட்டு அவனைக் கொன்று போட்டான் என்று குறிப்பிடுகின்றனர்.

ஜோசப்பஸ் (Josephus) என்ற யூத வரலாற்று ஆசிரியர், யோவான் ஸ்நானகனுக்கு இருந்த மக்கள் செல்வாக்கைப் பார்த்து, ''இது ஏதேனும் கலகத்தில் போய் முடிந்து விடுமோ என்று அந்திப்பாஸ் பயப்பட்டான்'' என்று எழுதுகிறார். மேலும் அவன் மாமனாராகிய அரேட்டாஸ், தன் மகளுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு, வஞ்சம் தீர்க்கும் வகையில் சில ஆண்டுகள் கழித்து,

அதாவது கி. பி 36 வாக்கில் இவனை முற்றுகையிட்டு, இவனுடைய சேனைக்குப் பெருத்த சேதம் விளைவித்தான் என்றும், இது இவன் தேவ மனுஷன் யோவான் ஸ்நானகனைக் கொன்ற பாவத்துக்குத் தேவனால் கொடுக்கப்பட்ட தண்டனை என்றும் வர்ணிக்கிறார். மேலும் சுமார் கி. பி 39-ல் இவனுடைய சகோதரனின் மகன் அக்கிரிப்பா என்பவன் இவன் மீது இராஜ துரோகக் குற்றம் சாட்டினான். அதில் பேரரசர் காயஸ் என்பவருக்கு விரோதமாகச் சதி செய்தான் என்று குற்றம் நிரூபிக்கப்பட்டது. பேரரசர் காயஸ் பதவியைப் பறித்துக் கொண்டதுமல்லாமல் நாட்டை விட்டே ஓடும்படி உத்திரவிட்டான்.

4. ஏரோது ராஜா என்கிற அக்ரிப்பா (அப் 22:1). இவன் அரிஸ்டோபலஸ் (Aristobulus) என்பவனுடைய மகனும் பெரிய ஏரோது என்பவனின் பேரனுமாவான். இவனுடைய தகப்பனார் கி.மு. 7ல் கொல்லப்பட்ட பிறகு இவன் ரோம அரண்மனையிலேயே வளர்ந்து வந்தான். இவனுக்கு ஏற்பட்ட கடன் சுமை காரணமாக சுமார் கி.பி. 23ல் ரோமாபுரியை விட்டு வெளியேற வேண்டிய-தாயிற்று. இந்தச் சமயத்தில் அந்திப்பாஸ் இவனுடைய சகோதரி-யாகிய ஏரோதியாளை மறுமணம் செய்திருந்தான். அந்தப் புது உறவைப் பயன்படுத்திக் கொண்டு இவன் திபேரியா பட்டணத்துக்கு வந்து அந்திப்பாஸினால் பராமரிக்கப்பட்டு வந்தான். அது கொஞ்ச காலம் தான். சுமார் கி.பி. 36ல் இவன் மீண்டும் ரோமாபுரிக்கே வந்து விட்டான். அப்பொழுது ரோமப் பேரரசராக இருந்த திபேரியு என்பவரோடு முரண்பட்டதால் சிறையில் அடைக்கப் பட்டான். திபேரியா பேரரசன் மரணம் அடைந்த பிறகு காயஸ் என்பவன் ரோமப் பேரரசனான். அவன் அக்கிரிப்பாவை விடுதலை செய்தது-மல்லாமல் பாலஸ்தீனாவின் வடகிழக்கு மாநிலங்களுக்கு அரசனாக்-கப்பட்டான். கி. பி 39 ல் அந்திப்பாஸ் நாடு கடத்தப்பட்ட பிறகு, கலிலேயாவையும், பெரேயாவையும் கூட இவனுடைய ஆட்சியின் கீழ் வந்தது.

கி. பி 41 ல் பட்டத்துக்கு வந்த கிலவுதி ராயன் யூதேயா-வையும் சமாரியாவையும் கூட இவனுடைய ஆட்சிக்கு விட்டு விட்டான். இதன் மூலம், சற்றேறக் குறைய இவனது பாட்டன் பெரிய ஏரோது ஆண்ட பகுதி முழுவதும் இவன் ஆட்சிக்குள் வந்தது. இவனுடைய ஆட்சிக்கு யூதர்களிடமிருந்து அதிக ஒத்-துழைப்புக் கிடைத்தது. ஏனெனில் இவனுடைய பாட்டி மரியம்நே, ஹாஸ்மோனியப் பரம்பரையில் வந்தவள்.

அப் 10:1-11:18-ன் படி, அப்போஸ்லர்கள் புறவினத்தாரிடம் நன்மதிப்புப் பெற்று வருகிறார்கள் என்று அறிந்த பிறகு, முன்னை விட அதிகமாக இவன் அப்போஸ்தலர்களை துன்புறுத்தி இம்சித்தான். கி.பி. 44ல் இவனுக்கு ஏற்பட்ட திடீர் மரணத்தைக் குறித்து (அப் 12:23) வரலாற்று ஆசிரியர் ஜோசப்பஸ் என்பவரும் குறிப்பிட்டிருக்கிறார். இரண்டும் ஒன்றையொன்று சார்ந்திருப்பதனால் இவைகள் கட்டுக்கதை அல்லது மிகைப் படுத்தப்பட்டது என்று சந்தேகிக்க இடமில்லை. அப்பொழுது அவனுக்கு வயது ஐம்பத்தி நான்கு. கி. பி 27 ல் இவனுக்கு அக்ரிப்பா ஏரோது என்று ஒரு மகனும், கி.பி 28ல் பெர்னீஸ் என்ற மகளும் (அப் 25:13) கி.பி 38ல் துருஸில்லா என்ற இரண்டாவது மகளும் பிறந்தனர். இவள் தான் பேலிக்ஸ் என்ற ஆளுநரின் மூன்றாவது மனைவி. (அப் 24:24)

## 5. அக்ரிப்பா II என்னும் ஏரோது.

இவன் ஏரோது அக்ரிப்பா என்பவனின் மகன். இவன் கி பி. 27ல் பிறந்தவன். இவன் தகப்பனார் திடீரென்று இறந்து விட்டபடியால் இவன் அரசுக் கட்டில் ஏறுவதற்கு சில இடையூறுகள் ஏற்பட்டன. மிகவும் சிறு வயது என்பது அதில் ஒன்று. ஆனால் அவைகளையெல்லாம் பொருட்படுத்தாமல் கி.பி. 56ல், பேரரசன் நீரோவினால் இணைக்கப்பட்ட புதுப்பகுதியாகிய பாலஸ்தீனாவின் வடக்கு மற்றும் வடகிழக்குப் பகுதிக்கும் சேர்த்து இவனை அரசனாக்கினான்.

இவைகளுக்கெல்லாம் நன்றி சொல்லும் வகையில் செசரியா பிலிப்பியில் இருந்த தன் தலை நகரை, நீரோனியன் என்ற புதிய நகரத்துக்கு மாற்றினான். கி.பி. 48 முதல் கி.பி. 66 வரை உள்ள காலத்தில் பிரதான ஆசாரியர்களை நியமிக்கும் விசேஷ அதிகாரத்தையும் பெற்றிருந்தான், கி.பி. 66ல் நிகழ்ந்த ரோமப் பேரரசுக்கு எதிராக நடந்த யூதப் புரட்சியைத் தடுத்து நிறுத்த பெருமுயற்சி மேற்கொண்டான். முயற்சி பயன் தராது என்ற நிலை வந்ததும் ஆட்சியாளர் பக்கம் நின்று தங்கள் குடும்பத்தாருக்கு ரோமப் பேரரசு செய்த எண்ணில்லா நன்மைகளுக்கு நன்றிக் கடன் காட்டினான்.

இவனுக்குக் குழந்தைப் பேறுகிடையாது சுமார் கி.பி. 100 வது ஆண்டில் காலமானான் அப்போஸ்தலன் பவுலோடு வாதாடி "நான் கிறிஸ்தவன் ஆவதற்குக் கொஞ்சம் குறைய நீ என்னைச் சம்மதிக்க வைக்கிறாய்" என்று கூறியவன் இவனே அப் 26:28.

E.Z. செல்வநாகம்

YOUR ATTENTION PLEASE:

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH** The voice of Truth—Speakers: Reggie Gnanasundaram, J. C. Choate, John Stacy.
All correspondence should be sent to The Voice of Truth, Post Box 3815, New Delhi-110049.
Mondays-9: 00 to 9: 15 P. M.
Fridays - 7:45 to 8:00 P. M.

**HINDI** Satya Susamachar-Speaker:Sunny David.
All correspondence should be sent to Satya-Susamachar, Post Box 3815, New Delhi-110049.
Tuesdays-9:00 to 9-15 P. M.
Thursdays-9:00 to 9:15 P. M.
Fridays-9:00 to 9:15 P. M.
Sundays-12:45 to 1:00 P. M.

**TELUGU** The voice of Truth-Speaker: Joshua Gootam
All Correspondence should be sent to The Voice of Truth, Post Box 80, Kakinada 533001.
Sundays-2.30 to 2:45 P. M.
Tuesdays-2:30 to 2:45 P. M.
Thursdays-2:30 to 2:45 P. M.
Fridays -2:30 to 2:45 P. M.
Saturdays-2:30 to 2:45 P. M.

**TAMIL** The Way of Truth-Speaker: P. R. Swamy.
All Correspondence should be sent to The Way of Truth, Post Box 8405, Bangalore-560084.
Tuesdays-5:30 to 5:45 P. M.
Thursdays-6:45 to 7:00 P. M.
Sundays-6:45 to 7:00 P. M.

**MALAYALAM** The Voice of Truth-Speaker: P. K. Varghese
All correspondence should be sent to Church of Christ Thevally, Quilon-9 (Kerala).
Tuesdays-3:45 to 4:00 P. M.
Fridays-3:45 to 4:00 P. M.

**KANNADA** The Voice of Truth-Speaker:Robert Rathnakar
Box No 448, Bangalore 560004
Sundays-1:45 to 2-00 P. M.

ALL ARE ENCOURAGED TO LISTEN

Bible Correspondence Courses and Christian Literature are available in these different languages from the addresses listed Also the radio sermons are available in book form.

ஜெபியுங்கள்! பங்கு கொள்ளுங்கள்!!

பெரியார் மாவட்ட
திருமறை ஆசான் வாசகர்கள்
கருத்தரங்கம்

இடம் : C.S.I. ஆரம்பப்பள்ளி
மெயின்ரோடு. பவானி டவுன்

நாள் : 22. 5. 90. செவ்வாய்க்கிழமை

நேரம் : காலை 9:30 மணி முதல்
மாலை 5 மணி வரை

நோக்கம் : ★ இதழ் மேம்பாட்டுக்கான ஆலோசனை
மற்றும்
★★ வாசகர்களின் கருத்துப் பரிமாற்றம்

வாசகர்களும் பொதுமக்களும் திரண்டு வாரீர்!
அனுமதி இலவசம்.

இன்னணம்
E.Z. செல்வநாயகம்
திருமறை ஆசான் ஆசிரியர்

Published by Church of Christ and Printed at Jeevasakthi Press
Erode-638 003.
Editor. E. Z. Selvanayagam.

PRINTED MATTER.
BOOK-POST

TO

If undelivered please return to :
The Editor:
THIRUMARAI AASAAN
Post Box No: 58 ERODE - 638 001.